10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 338 வெள்ளிக்கிழமை 27 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## கொக்குவிலில் வாள்வெட்டு

கொக்குவில்,ஏப்.27

கொக்குவில் முதலி கோவில் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆவா குழுவைச் சேர்ந்த மோகன் அசோக் என்பவரே இந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் அவருக்கு எதிராக பல்வேறு 06▶

# அரசியல் கைதிகளும் இரகசிய முகாம்களும் இல்லை



கொழும்பு, ஏப்ரல் 27

இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை என கூறியுள்ள ஜனாதிபதி நாட்டில் எவ்வித இரகசிய முகாம்களும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையை பிளவுபடுத்த மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எந்த விதத்திலும் தனது உறுதுணை கிடைக்காது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துக்கொள்ள லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி பீ.பீ.சி சிங்கள சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

எனது அரசாங்கத்தின் கீழ் எவ்விதமான இரகசிய முகாம்களும் இலங்கையில் இல்லை. சிறை முகாம்கள், இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸாருக்கு சொந்தமான இடங்கள் என எந்த இடத்திலும் எவரும் இரகசியமாக தடுத்து வைக்கப்படவில்லை.

நான் லண்டனுக்கு விஜயம் செய்யும் போது விடுதலைப் புலிகளே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர். இப்படியான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவது குறித்து மகிழ்ச்சி. இவர்கள் கோரும் ஈழம் எப்போதும் நடக்கப் போகும் விடயமல்ல.

போர் நடைபெற்ற காலத்தில் பாதுகாப்பு படையினர் கையகப் 06▶

## தமிழர் தாயகத்தை கைவிட முடியாது

### விக்கிரமபாகு உறுதி



யாழ்ப்பாணம்,ஏப்.27

தமக்கு அடிபணிந்து ஏனையவர்கள் இருக்க வேண்டும் என்று தான் சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் விரும்புகின்றார்கள். அதனால் தான் சாத்வீக போராட்டங்களை கண்டு அஞ்சுகின்றார்கள்.

தந்தை செல்வாவின் கனவுகள் இன்னும் நிறைவேறவில்லை, தமிழர் அரசு இன்னமும் உருவாகவில்லை, தெற்கில் உள்ளவர்கள் எதிர்க்கிறார்கள் என்பதுக்காக தமிழர் தாயகத்தை கைவிட்டு விட 06▶

## அரசியல் கைதிகள் விடுதலையில் ஏமாற்றுகிறார் ஜனாதிபதி

### சுமந்திரன் பாய்ச்சல்



யாழ்ப்பாணம்,ஏப்.27

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் நேற்று மதியம் நடைபெற்ற 06▶

## கைதிகளின் விடுதலையை மே தினத்தில் வலியுறுத்துக

### அருட்தந்தை சக்திவேல் கோரிக்கை



கொழும்பு,ஏப்.27

வழமைபோன்றே மே தின மேடைகளில் அறிவிப்புக்களை வெளியிடாமல், இம்முறை மே தினத்தில் அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்பதை முன்வைத்து அர்சாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் இணைப்பாளர் 06▶

## ஈ.பி.டி.பி குறித்து பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.27

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தும் அளவுக்கு ஈ.பி.டி.பி பெரியகட்சியல்ல. நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியதற்கான ஆதாரங்கள் இருந்தால் அதனை வெளிப்படுத் தட்டும் 06▶

## ஆசிரியை தாக்குதல் மாணவன் படுகாயம்



யாழ்ப்பாணம்,ஏப்.27

வவுனியாவில் வீட்டில் தனிப்பட்ட வகுப்புக்களை நடத்தும் ஆசிரியை ஒருவர் 9 வயதுச் சிறுவனைக் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளார். தாக்கப்பட்ட சிறுவன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப் 06▶

## ரவியின் நியமனத்தால் யானைக்குள் குழப்பம்

கொழும்பு,ஏப்.27

ரவி கருணாநாயக்க ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவராக நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் இருந்து 06▶

## மல்லாவியில் சுழன்றடித்த காற்று கடைகளின் கூரைகள் பறந்தன



மல்லாவி,ஏப்.27

முல்லைத்தீவு மல்லாவியில் நேற்று மாலை வீசிய கடும் காற்றினால் நகர்ப் பகுதியில் உள்ள 6 கடைகள் சேதமடைந்துள்ளன.

நேற்று மாலை 4.30 மணியளவில் மல்லாவி நகர்பகுதியில் கடும் காற்றுடன் கூடிய மழைபெய்துள்ளது.

இதனால் மல்லாவி நகர்ப்பகுதியில் பாரிய நெல் ஆலை ஒன்று முற்று முழுதாக சேதமடைந்துள்ளதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த 06▶

# சம்பந்தரை எதிர்த்தால் மகிந்தவுக்கே தோல்வி

மட்டக்களப்பு, ஏப்.27

இந்த நாட்டுக்கு தலைகுனிவை ஏற்படுத்துவதற்குத் தயார் என்றால், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை மஹிந்த ராஜபக்ச கொண்டு வரலாம். அதனால், அவர் நிச்சயமாகத் தோல்வி அடைவார் என்று கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கிருஷ்ணபிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுணதீவு - நாவற்காடு பிரதேசத்தில் மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நாட்டிலும் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தது கிடையாது. முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஏற்கனவே இந்த நாட்டில் களேபரத்தை ஏற்படுத்தி, நாட்டுக்குப் பெரிய அபகீர்த்தியையும் தலைகுனிவையும் ஏற்படுத்தியது. அது முழுக்க முழுக்க துவேசத்தின் அடிப்படையிலேயே கொண்டு வரப்பட்டது. அதன் விளைவுகளாக இந்த நாடே அல்லலுறும் வகையிலான நிகழ்வுகள் இடம்பெற்றன.



இந்த நாடு சின்னாபின்னமாகும் அளவுக்கு இடம்பெற்ற அநியாயங்கள் எல்லாம் அன்றைய எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்ததற்குப் பிறகு ஏற்பட்ட அனர்த்தங்களே. இதனை மகிந்த ராஜபக்சவுக்கு நாங்கள் எச்சரிக்கையாகக் கூடச் சொல்லுவோம். தற்போது இருக்கின்ற கூட்டு எதிரணியினருக்கு வெறும் வாய் மெல்லும் ஆச்சிக்கு அவல் கிடைத்தது போன்று சில விடயங்கள் கிடைத்திருக்கின்றன. அதைக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதாகச் சொல்லுகின்றார்கள். பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தார்கள். இதனால், பிரதமரைப் பலப்படுத்தியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தாலும் இதே விடயம் தான் இடம்பெறும்.

பண்டாரநாயக்காவின் கனவை நனவாக்கி இந்த நாட்டிலே சமத்துவமாக எல்லா மக்களும் வாழக்கூடிய வகையிலான அதிகாரப் பங்கீடு தேவை என்பதைச் செயற்படுத்திக் கொண்டிருப்பவரும், அதற்காக தன்னுடைய மக்களை ஒருங்கிணைத்துக் கொண்டிருப்பவருமாக எமது எதிர்க்கட்சித் தலைவர் விளங்குகின்றார். பண்டாரநாயக்காவின் சமஷ்டிக் கொள்கையை நிதர்சனமாக்க உழைத்துக் கொண்டிருக்கின்ற அந்தத் தலைவருக்கு எதிரான செயற்பாடுகளை, பண்டாரநாயக்காவைத் தங்களுடைய தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற மஹிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணி செய்யும் என்றால் அது பண்டாரநாயக்காவுக்குச் செய்கின்ற மிகப்பெரிய துரோகம் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## 8 வீத வாக்குறுதிகளே அரசால் நிறைவேற்றம்

கொழும்பு, ஏப்.27

கடந்த 2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் மூலமாக அரசாங்கம் முன்வைத்த வாக்குறுதிகளில் 8 வீதம் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டத்தின் வாக்குறுதிகள் மற்றும் அவற்றின் யதார்த்த நிலை குறித்து சுயாதீன நிறுவனம் ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றிலேயே இந்த விவரங்கள் தெரிய வந்துள்ளன.

'வேரிடே' என்ற ஆய்வு நிறுவனம் இந்தப் பணிகளை முன்னெடுத்திருந்தது. இதன் பிரகாரம் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மதிப்பீட்டைக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களாக வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவற்றில் இதுவரை 8 வீதத்துக்கும் குறைவான செயற்திட்டங்களே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதிலும் 35 வீதமான செயற்றிட்டங்களே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் சாத்தியப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. (ஆ)

## கனிய மணல் விற்பனைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப்.27

இலங்கைக் கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் பெருந்தொகையாக சேமிக்கப்பட்டுள்ள கனிய மணலை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி உள்ளது.

இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனம் மூலமாக இல்மனைட், ரூடைல், சர்கோன் மற்றும் ஹைடை இல்மனைட் என்பன உற்பத்தி செய்யப்பட்டு சர்வதேச சந்தைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. தற்போதைய நிலையில் சுமார் 17 ஆயிரத்து 800 மெட்ரிக் தொன் கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை, சர்வதேச சந்தையில் விற்பனை செய்வதற்குக் கனிய மணல் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கி உள்ளது. (ஆ)

## சமூக விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி

கொழும்பு, ஏப்.27

இலங்கை திறந்த பல்கலைகழகத்தால் நடத்தப்படும் சமூக விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி டிப்ளோமாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு தரம் 9 வரையான கனிஷ்ட இரண்டாம் நிலை அல்லது ஆரம்பக் கல்விப் பூர்த்தியுடன் குறைந்தது 2 வருடத்துக்கு சமமான சான்றிதழ் வழங்கப்பட்ட வேலை அனுபவம் இருக்க வேண்டும்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்கும் இந்தக் கற்கை நெறியில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கை நெறி டிப்ளோமாவுக்கு அனுமதி பெறுவதற்கு அடிப்படை மொழியாற்றலுடன் 18 வயதை அடைந்தவராக இருத்தல் போதுமானதாகும்.

கண்டி, ஹட்டன், யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும், இலங்கை திறந்த பல்கலைகழகப் பிராந்திய கற்கை நிலையங்களிலும் இடம் பெறும்.

இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள் கலைமாணி பட்டப்படிப்புக்கு நேரடியாக அனுமதிக்கப்படுவர்.

இந்த கற்கை நெறியை பூர்த்தி செய்பவர்கள் சட்டமாணி மற்றும் முகாமைத்துவமாணி கற்கை நெறிகளுக்காக நடத்தப்படும் அனுமதிப் பரீட்சையையும் மேற்கொள்ளத் தகுதியுடையோர் ஆவார். இந்தக் கற்கைநெறிக்கான காலம் இரண்டு வருடங்களாகும்.

சமூக விஞ்ஞான கற்கை நெறி டிப்ளோமாவுக்கான விண்ணப்பத்தைச் சரியாக பூர்த்தி செய்து மே மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் இணையத்தளத்தினூடாக சமர்ப்பிக்க முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை , இலங்கை திறந்த பல்கலைகழகத்தின் மக்கள் தொடர்பு நிலையத்தின் 0112881256, 0112881327 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (ஆ)



## வவு. விபத்தில் தாயும் மகளும் படுகாயம் !

வவுனியா, ஏப்.27

வவுனியா சூசைப்பிள்ளையார் குளச் சந்தியில் மோட்டார் சைக்கிளும், மரக்கறி ஏற்றி சென்ற கன்டர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், தாயும் மகளும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் தனது மகளை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்துடன் தொடர்புடைய வாகனச் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஆ)

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துக

கொழும்பு, ஏப்.27

நீரேந்துப் பகுதிகளிலும், நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்களிலும் நீர் மட்டம் 48 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மின்சார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வீழ்ச்சியால் சமகால நீர் மின் உற்பத்தி வலு 20 வீதம் வரை உள்ளது . நுரைச்சோலை நிலக்கரி மின்நிலையத்தில் 3 சக்தி பிறப்பாக்கி இயந்திரங்களும் உச்ச அளவில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## இலங்கை - கனடா பேச்சு



வவுனியா , ஏப்.27

கனடாவுக்கான சர்வதேச விவகாரங்களின் பணிப்பாளர் நாயகம் டேவிட் ஹாட்மன்- இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் ஆகியோர் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளனர்.

இதன்போது, நடைமுறையில் உள்ள நல்லிணக்க நடவடிக்கைகள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்தி, முதலீடு மற்றும் நல்லிணக்க நடைமுறைகள் என்பனவற்றில் கனேடிய அரசாங்கம் மற்றும் கனேடிய வர்த்தகர்களின் ஆழ்ந்த ஈடுபாடு தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஆ)

## மின்குமிழ்களை வழங்கத் திட்டம்

கொழும்பு, ஏப்.27

மின்சாரத் தேவை அதிகமாக உள்ள இந்த காலப்பகுதியில், குறைந்த செலவிலான மின் குழிழ்களை வழங்குவதற்கு மின்சக்தி, எரிசக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறைந்த செலவிலான மின் குழிழ்களின் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில் , மின் குமிழ்களை குறைந்த விலையில் வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது என அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்தார். (ஆ)

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 27 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# பரவும் விஷம்

ஒரு குருவும், அவருடைய சிஷ்யரும் ஆற்றைக் கடந்து மறு கரைக்குச் செல்ல வேண்டிய நிலையில் கரைப் பகுதிக்கு வந்தனர்.

அப்போது அங்கு வந்த ஒரு பெண்மணி, குருவிடம், "நானும் இந்தக் கரையைக் கடந்து அக்கரைக்குச் செல்ல வேண்டும். உங்களால் எனக்கு உதவ முடியுமா?" என்று கோரினாள்.

சரி என்ற குரு, அந்தப் பெண்ணை தோளில் தூக்கிக் கொண்டு ஆற்றில் இறங்கினார். சிஷ்யனுக்கோ பயங்கர அதிர்ச்சி. ஒரு துறவி, ஓர் இளம் பெண்ணைத் தோளில் தூக்கிச் செல்வது தகுமா? துறவியின் புனிதத் தன்மை கெட்டு விடுமே என்று பதறினான்.

மறு கரை வந்ததும், குரு அந்தப் பெண்ணை இறக்கிவிட்டுவிட்டார்.

சிஷ்யனுக்கோ மனதில் பெரும் குழப்பம். குருவிடம் எப்படிக் கேட்பது என்று புரியாமல் மனதில் இதைப் பற்றியே அலசியபடி வந்து கொண்டிருந்தான்.

நீண்ட தூரம் சென்ற பின் மரத்தடி ஒன்றில் இருவரும் ஓய்வெடுக்க அமர்ந்தனர். அப்போது அந்த சிஷ்யன் தனது மனதில் இருந்த கேள்வியை குருவிடம் கேட்டான்.

அதற்கு குரு "நான் அந்தப் பெண்ணை ஆற்றங் கரையிலேயே இறக்கிவிட்டுவிட்டேன். நீ இன்னும் இறக்கி வைக்கவில்லையா?" என்று கேட்டார். உடனே சிஷ்யன் தலைகுனிந்து நின்றான்.

இதே நிலைதான் இப்போது திருகோணமலையில் உண்டான அபாயா அணிந்த ஆசிரியர் விவகாரத்திலும் நிகழ்ந்திருக்கிறது. 'அபாயா அணிந்து தான் பாடசாலைக்குப் போவேன்" என் அடம் பிடித்து, பாடசாலை அதிபரை தன்னுடைய கணவர் மூலமாக அச்சுறுத்திய முஸ்லிம் பெண் ஆசிரியையை வேறு பாடசாலைக்கு இடம் மாற்றியதுடன் இந்தப் பிரச்சினைக்கு அங்கு முடிவு கட்டப்பட்டுவிட்டது. ஆனால், குரு பெண்ணைத் தூக்கியதால் குழம்பிய சீடனின் வழியில் வந்த பலரும் இன்னமும் அந்தப் பிரச்சினையைத் தூக்கிப் பிடித்து, அதனைப் பெரும் சர்ச்சையாக்க முயன்று வருகின்றனர். அதிலும் குறிப்பாக சில முஸ்லீம் இளைஞர்கள் சமூக வலைத்தளங்களில் தமிழ் ஆசிரியர்களின் சேலையை பாலியலுக்குத் தூண்டும் ஆடையாகச் சித்தரித்து வன்மத்தைக் கக்கி வருகின்றனர்.

தமிழ் ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பாலியல் ஆசையத் தூண்டும் வகையில் ஆடை அணிவதாகவும், ஆனால் முஸ்லிம் ஆசிரியைகள் மாத்திரமே மூடி மறைத்து, பண்பாடாகச் செல்வதாகவும் கருத்துக், களை வேறு திசை நோக்கித் திருப்ப முனைகின்றனர். அந்த வன்மமான கருத்துத் திசை திருப்பலின் உச்சமாக, கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொல்லப்பட்ட வித்யாவின் புகைப்படத்தைப் பதிவிட்டு, அதில் அவரின் பாடசலை உடையைப் பார்க்கும் போது தமக்கே வன்புணர்வு செய்ய ஆசை வருவதாக அருவருப்பான சொல்லாடல்களை உளறிக்கொட்டி வருகின்றனர்.

முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த, வக்கிரபுத்தியுடைய மிகச்சிலரே இவ்வாறான கைங்கரியங்களில் ஈடுபட்டாலும், ஒட்டுமொத்தமாக முஸ்லிம்கள் மீதான காழ்ப்புணர்ச்சியை இத்தகைய கருத்துக்கள் ஏற்படுத்திவிடக் கூடும். ஒரு சிறு பொறி, பென்னம் பெரிய காட்டையே அழித்துவிடலாம். இது போன்ற அற்பர்களின் கருத்துக்கள் இரண்டு சிறுபான்மையினரிடையே மீண்டும் பகையுணர்வைத் தோற்றுவிக்கக் கூடாது. இரு தரப்பும் மற்றைய இனத்தவர்களின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் விமர்சிப்பது அழகாகாது , மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. இனியாவது சம்பந்தப்பட்ட நச்சுக்கருத்துக்களை கக்கி வரும் விஷப் பாம்புகளின் பற்களை அவர்கள் சார்ந்தவர்கள் பிடுங்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு குடம் பாலையும் ஒரு துளி விஷம் நஞ்சாக்கி விடும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# வெப்பத்தை தணிப்பதற்காக மது அருந்தினாராம் ஆசிரியர்

யாழ்ப்பாணம்,ஏப்.27

வெப்பம் அதிகமாக உள்ளதால் குளிர்மைக்காக ஆசிரியர் மது அருந்தினார். ஆனால் அவர் முடாக் குடிகாரர் இல்லை இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட ஆசிரியர் சார்பில் மூத்த சட்டத்தரணி ஒருவர் மன்றிடம் உரைத்தார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால், ஆசிரியர் ஒருவர் மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்து செய்யப்பட்டார்.

பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அவர், நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன் போதே மூத்த சட்டத்தரணி இந்த விடயத்தை மன்றில் தெரிவித்தார்.

ஆசிரியர் குற்றத்தை ஏற்றுக் கொள்கிறார். அவர் தீவகத்தில் பணியாற்றுகிறார். அன்றைய



தினம் அதிக வெப்பநிலை காரணமாக குளிர்மைக்கு மது அருந்துவிட்டார். ஆனால் அவர் தினமும் மதுப்பழக்கமுள்ள குடிகாரர் இல்லை என்று சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

ஆசிரியர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில், அவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்ததுடன் ஆயிரத்து 500 ரூபா அரச செலவும் அறவிடுமாறும் மன்று உத்தரவிட்டது.

அத்துடன், ஆசிரியரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை 9 மாதங்களுக்கு தடுத்துவைக்குமாறு நீதிமன்ற பொலிஸாருக்கு மன்று கட்டளையிட்டது.

# குழப்பம் விளைவிக்க முயன்ற 10 பல்கலை மாணவர்கள் கைது

கொழும்பு,ஏப்.27

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு முன்னால் நேற்றையதினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்கு ஒருவர் உள்ளிட்ட 10 பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது குழப்பம் விளைவிக்க முயன்ற குற்றச்சாட்டில் குறித்த பிக்கு மாணவர் உள்ளிட்ட 10 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் குழப்பத்தை தோற்றுவித்ததோடு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குள் அத்துமீறி நுழைய முயன்றதாக இவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

2016/17 ஆம் கல்வியாண்டுக்காக, பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், பௌத்த சமயம் மற்றும் பௌத்த ஆய்வுத் துறைக்கு மாணவர்கள் இணைத்துக்கொள்வது இடைநிறுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பர்ட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எமிரேட்ஸ் தூதுவர் பாதுகாப்பு அமைச்சர் சந்திப்பு

கொழும்பு ,ஏப்.27

இலங்கைக்கான புதிய ஐக்கிய அரபு அமீரகத் தூதுவர் அஹ்மத் அலி அல்மு அல்லா- பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் வைத்து நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, ஐக்கிய அரபு அமீரகத் தூதுவர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கிடையில் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் சிநேகபூர்வக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வை நினைவுகூறும் வகையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால், ஐக்கிய அரபு அமீரகத் தூதுவருக்கு நினைவுச் சின்னம் ஒன்று வழங்கப்பட்டது. (ஆ)



# இ.போ.சவுடன் மோதல் இருவர் படுகாயம்



மன்னார்,ஏப்.27

யாழ்ப்பாணம் மன்னார் வீதி விடத்தல் தீவுப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று நண்பகல் நடைபெற்ற இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது;

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற இ.போ.ச பேருந்து விடத்தல் தீவினை அண்மித்து சென்று கொண்டிருந்த போது குறுக்கு வீதியூடாக பிரதான வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிள் பிரதான வீதிக்கு குறுக்கே திடீரென வந்த காரணத்தினால் இ.போ.ச பேருந்தின் சாரதி பேருந்தை வீதியோரமாக செலுத்தியுள்ளார். இருப்பினும், பேருந்தை நோக்கி வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் பேருந்துடன் மோதியுள்ளது. இச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் படுகாயமடைந்துள்ளனர்

# மன்னாரில் கைப்பற்றப்பட்ட 'டைனமெற்' மீன்கள்

மன்னார்,ஏப்.27

மன்னார் - பள்ளிமுனை கடற்கரையில் உள்ள மீனவர்களின் மீன் வாடிகள் சிலவற்றில் இருந்து நேற்று மாலை தடை செய்யப்பட்ட 'டைனமெற்' வெடி பொருட்களை பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மன்னார் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளினால் ஒரு தொகை மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட



'டைனமெற்' வெடி பொருட்களை பயண்படுத்தி மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபட்டுள்ளதாக கடற்படையினர் மன்னார் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளுக்கு நேற்று மாலை தகவல் வழங்கியுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விரைந்து செயற்பட்ட நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் 4 வாடிகளிலிருந்து 'டைனமெற்' வெடி பொருட்களை பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள் என்ற சந்தேகத்தில் ஒரு தொகை மீன்களை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மீன்களையும் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைத்து சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாக கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இன்று நாளும் கோளும்

27.04.2018 வெள்ளிக்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 14 ஆம் நாள்

துவாதசி மு.ப. 08.25 வரை | உத்திரம் பி.ப. 02.19 வரை | குளிகை மு.ப. 07.30-09.00

இராகுகாலம் 10.30- 12.00 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் பி.ப. 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிக்கல் | போட்டி | ஆதாயம் | சந்தோசம் | உழைப்பு | ஆதரவு | திடம் | சிந்தனை | வெற்றி | தாமதம் | உயர்வு | முயற்சி |

# டிக்கோயாவில் லயன் இடிந்து 34 குடும்பங்கள் பாதிப்பு

ஹட்டன், ஏப்.27

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா தரவலை மேற்பிரிவு தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக லயன் குடியிருப்பு ஒன்று பகுதியளவில் இடிந்து வீழ்ந்துள்ளது எனக் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர். இதனால், 34 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இந்தத் தோட்டத்தில் லயன் குடியிருப்பு இடிந்து விழும் அபாயத்தில் காணப்பட்டது. இது தொடர்பில் தோட்ட நிர்வாகத்திடம் பலமுறை அறிவித்துள்ளபோதிலும், நிர்வாகம் இது தொடர்பில் அலட்சியப்போக்குடன் காணப்பட்டது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் குடியிருப்பு இடிந்து வீழ்ந்ததை அடுத்து, பாதிக்கபட்ட மக்கள் தொடர்ந்தும் அதே குடியிருப்பில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், பாதிக்கபட்ட மக்களை பாதுகாப்பான இடத்தில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளைக் ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது. (ஆ)

# புதிய உள்ளூராட்சி தேர்தல் முறைய ஆராயக் குழு

கொழும்பு, ஏப்.27

புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறையை பரிசீலிக்க கல்விமான்கள் குழு ஒன்றைத் நியமிக்கப் போவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்திலும் பார்க்க அதிகமானது. இந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உள்ளார். பெண்களின் விகிதாசாரம் 25 வீதமாக அதிகரிக்கப்பட்டமை மற்றும் வட்டார முறையை உள்ளடக்கிய கலப்புமுறை என்பவற்றால் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பெண்களின் விகிதாசார அதிகரிக்கப்பட வேண்டும் என்ற இலக்கை நோக்கிச் சென்றமையால்தான் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த முறை 1919 பெண்கள் தெரிவாகி உள்ளனர். அது மாத்திரமன்றி நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிய கட்சிகளையும் திருப்திப்படுத்தும் வகையில் திருத்தங்களை மேற்கொண்டமையும் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் நடைமுறைச் சிக்கல்கள் பல எழுந்துள்ளன. இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய உள்ளோம். சட்டத் திருத்தத்தை வரைவதற்காக நிபுணர்கள் குழுவொன்று விரைவில் நியமிக்கப்படும். மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பில் துறைசார் நிபுணர்கள், பொது மக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் உள்ளிட்ட பல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் பற்றி சகல தரப்புக்களினதும் கருத்துக்களை அறிந்து இந்தத் திருத்தங்களைக் கொண்டுவர அரசு தயாராக உள்ளது. தேர்தலைப் பின்போடும் தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எந்தவொரு அச்சத்தையும் ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# தேர்தலே ஒரே தீர்வு



கொழும்பு, ஏப்.27

அரசாங்கத்தின் தவறான கொள்கைகளால் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமற்ற நிலையில் காணப்படுகிறது. இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு பொதுத் தேர்தலே என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாது செய்கின்றமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், நாடாளுமன்றில் பிரேரணை முன்வைக்கப்பட்டதன் பின்னரே தன்னால் இது தொடர்பில் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முறையான நிர்வாகம் இல்லாத காரணத்தால் விலைவாசி விண்ணைத்தொடும் அளவுக்கு உயர்வடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

நாட்டின் அனைத்து விடயங்களும் நிலையற்ற தன்மையில் காணப்படுவதாகவும், அரசாங்கத்தின் சொத்துகளை எவர் வேண்டுமானாலும் விற்பனை செய்யும் நிலை காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஆ)

# முப்பது வருட யுத்தத்துக்கு இனவாதமே காரணம்

திருகோணமலை ,ஏப்.27

பௌத்த நாடு பௌத்தர்களுக்கே எனக் கூறியதால்தான் முப்பது வருட யுத்தம் நடைபெற்றது. திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற கவனவீர்ப்பு போராட்டத்தின்போது ஏந்தபட்டிருந்த பதாகைகளிலும் “இந்துப் பாடசாலை இந்துக்களுக்கே” என்ற வாசகம் எழுதி இருந்ததை அவதானிக்க முடிந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.



திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில், முஸ்லிம் ஆசிரியர்கள் அணியும் ஆடைகளை விமர்சித்து கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் போராட்டங்கள் தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

”பாடசாலைக்குள் அதிபரின் அனுமதியின்றி நுழைந்து பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளுக்கு யார் குழப்பம் விளைவித்தாலும் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் . இதில் எந்தவித மாற்று கருத்தும் இல்லை. பாடசாலையில் அக்கறை கொண்ட பெற்றோர் என்ற ரீதியில் இந்த நடவடிக்கையை கண்டித்து கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துவதிலும் தவறில்லை. ஆனாலும், சண்முகா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டம் அதன் நோக்கங்களைத் தாண்டி இனவாதத்தைத் தூண்டுவதாக அமைந்தமை வருத்தமளிக்கிறது.

குறித்த பாடசாலையில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்கள் அணியும் ஆடை விடயத்தில் ஏதாவது பிரச்சினை காணப்படின் அதைக் கல்வித்திணைக்கள அதிகாரிகளுடன் பேசி சுமுகமான தீர்வொன்றைக் கண்டிருக்கலாம். ஆனால், இந்தப் பிரச்சினையை இந்த அளவு பூதாகரமாக்கிய பாடசாலை நிர்வாகம் மற்றும் சம்மந்தப்பட ஆசிரியர்களின் நடவடிக்கைகள் கண்டிக்கத் தக்கது.

ஆடை அணியும் சுதந்திரம் தனிமனித உரிமை சார்ந்தது. முஸ்லிம் பாடசாலைகளில் பல தமிழ் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இதுவரை அந்த ஆசிரியர்களை முஸ்லிம் கலாசார ஆடைகளை அணியுமாறு பாடசாலை நிர்வாகம் கூறியதாக நான் அறியவில்லை. அத்துடன், தமிழ் பாடசாலைகளில் தமிழ் கலாசார ஆடைகள் அணிய வேண்டுமாயின் ஆசிரியர்கள் காற்சட்டை அணியாமல் வேட்டி சட்டை அணிந்துவருமாறும் யாரும் கூறியதில்லை. கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.” என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# தங்க அதிகார சபை மக்களிடம் கோரிக்கை

கொழும்பு ,ஏப்.27

தங்க ஆபரணங்கள் கொள்வனவின் போது தேசிய மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் தர முத்திரையுடன் கொள்வனவு செய்யுமாறு தங்க ஆபரண அதிகார சபை பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தங்க ஆபரண விலை அதிகரித்துள்ளமை காரணமாக, சந்தையில் தரம் குறைந்த தங்க ஆபரணங்களை விற்பனை செய்ய வாய்ப்புக்கள் இருப்பதால், விழிப்புடன் செயற்படுமாறு அதிகார சபையின் பணிப்பாளர் மகேஷ் கம்மன்பில தெரிவித்துள்ளார். (ஆ)

# அர்ஜூன், கசுனுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப்.27

பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட, பர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களைக் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் நேற்றுக் காலை ஆஜர் படுத்தியபோதே, நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மத்தியவங்கி பிணை முறி மோசடி தொடர்பில் குற்றவியல் விசாரணை பிரிவால் இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# வவுனியாவில் கௌரவிப்பு



வவுனியா , ஏப்.27

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவாகிய வவுனியா வர்த்தக சங்கப் பிரதிநிதிகளை கௌரவிக்கும் நிகழ்வு, வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வர்த்தக சங்க செயலாளர் சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வவுனியா வர்த்தக சங்கப் பிரதிநிதிகளாக இருந்து, வவுனியா நகரசபைத் தலைவராக தெரிவாகி உள்ள இ.கௌதமன், நகரசபையின் உப தலைவர் சு.குமாரசாமி, வவுனியா தெற்குத் தமிழ் பிரதேச சபைத் தலைவர் து.நடராஜசிங்கம், வவுனியா தெற்குத் தமிழ் பிரதேச சபையின் உபதலைவர் வே.மகேந்திரன், வவுனியா நகரசபை உறுப்பினர் ரி.கே.இராஜலிங்கம் ஆகியோரே கௌரவிக்கப்பட்டுள்ளனர். (ஆ)





# தந்தை செல்வாவின் 41 ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஏப். 27

தந்தை செல்வாவின் 41 ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வு, யாழ். நகரில் அமைத்துள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், மாநகர முதல்வர் இபானுவேல் ஆர்னோல்ட், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது, தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு, தந்தை செல்வா அறக்காவலர் சபையின் தலைவர், தந்தை செல்வாவின் புதல்வர், யாழ். மாநகர முதல்வர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, தந்தை செல்வா நினைவுச் சமாதியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் பின்னர், நினைவுப் பேருரைகள் இடம்பெற்றன. (ஆ)

## இளம் விஞ்ஞானிகள் போட்டி: இலங்கைக்கு 3 தங்கம்

கொழும்பு, ஏப்.27

சர்வதேச இளம் விஞ்ஞானிகளுக்கான போட்டியில் இலங்கை மூன்று தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளது.



இந்தப் போட்டி சேர்பியாவின் தலைநகர் பெல்கிரேட் நகரில் 25 ஆவது தடவையாக நடைபெற்றது.

இதற்கு இலங்கையின் சார்பில் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த சமாஷி விஹங்க முனவீர, கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த சவந்தி சேனாநாயக்க, கொழும்பு நாலந்தா கல்லூரியைச் சேர்ந்த ரகிந்து விக்ரமரத்ன ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இவர்கள் மூவரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சுவரொட்டிகள் ஆகிய பிரிவுகளில் போட்டியில் கலந்து கொண்டார்கள். சுவரொட்டிப் பிரிவில் மூவருக்கும் தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.

இந்த இளம் விஞ்ஞானிகளுக்கான போட்டியில் ரஷ்யா, ஜேர்மன், நெதர்லாந்து, இந்தியா, பிரான்ஸ், பிரேஸில், இந்தோனேஷியா முதலான நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டார்கள். இதில், 215 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## வடமாகாண அழகக சங்கங்களின் தொழிலாளர் தினம்

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் ஒன்றிணைந்த வடமாகாண அழகக சம்மேளனத்தின் மே தினக்கூட்டம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து அழகக சங்கங்களையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண அழககச் சம்மேளனத் தலைவர் கே.நடராசா கேட்டுள்ளார். (ஆ)

## எவன்கார்ட் விவகாரம்: மேலும் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 27

கடந்த 2015 ஆம் ஆண்டு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட எவன்கார்ட் கப்பல் தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபர் நேற்றைய தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் எவன்கார்ட் கப்பலின் நடவடிக்கை முகாமையாளராகப் பணிபுரிந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், குற்றவிசாரணைப் பிரிவினர் முன்னெடுத்து வந்த விசாரணைகளுக்கு அமைய முன்னாள் கடற்படை லெப்டினான 43 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் காலி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். (ஆ)

## டிக்கோயா நகரசபை கன்னி அமர்வு

ஹட்டன், ஏப்.27

ஹட்டன் - டிக்கோயா நகரசபையின் கன்னி அமர்வு நேற்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நகரசபைத் தலைவர் சடையன் பாலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது, ஹட்டன் டிக்கோயா நகரசபையில் நீண்டகாலத் தலைவராகச் செயற்பட்ட அபூசாலிக்கு ஒரு நிமிடம் மௌன ஆஞ்சலி செலுத்தபட்டு அபூசாலி அவர்கள் தொடர்பாக ஹட்டன் டிக்கோயா நகரசபையின் உறுப்பினர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவு., கிளி., திருமலை மாவட்டங்களில் நல்லிணக்க அமைச்சு அபிவிருத்தி


கொழும்பு, ஏப்.27

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என்று அந்த அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

"வவுனியா மாவட்டத்தில் 24 மில்லியன் ரூபா செலவில் மறவன்குள வீதி அபிவிருத்தி, செங்கல்பட்டிக் குளம், கருக்கைக்குளம், மதியாமடு, சின்னபூவரசங்குளம் ஆகிய பிரதேசங்களில் நீர்ப்பாசனக் குளப் புனரமைப்பு, 24 மில்லியன் ரூபா செலவில் பிராந்திய சுகாதார பணிமனைக்கு மருத்துவ உபகரணம் வழங்கல், மகிழங்குளம் பெண்கள் பாடசாலைக்கு ஆய்வு கூட வசதி என்பன மேற்கொள்ளப்பட உள்ளன.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் 34 மில்லியன் ரூபா செலவில் மகாருக்கிராம குள வீதி, வெல்கம விகாரையில் இருந்து பிரதான வீதிவரையான உள்ளக வீதிப் புனரமைப்பு, நெலுங்கமவில் - சேருவில ரஜ மகா விகாரை உள்ளக வீதிப் புனரமைப்பு மற்றும் தென்னைமரவாடி ஆசிரியர் விடுதி என்பன அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 20 மில்லியன் ரூபா செலவில் பனைசார் உணவு பதனிடும் நிலையம் அமைக்கப்பட உள்ளது. மேலும் வீதிகள் அமைப்பதற்கு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் உள்ளக இடப்பெயர்வுகளைச் சந்தித்தவர்கள், தாயகம் திரும்பும் அகதிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள் போன்றோரின் வாழ்வாதாரம் மேம்படும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



## பக்குவமாச் சாகவும் யோசிக்க வேண்டியெல்லே கிடக்கு!

அண்ணை உந்தச் சுமந்திரனுக்கு என்ன நடந்தது? என்னப்பா திடீரெண்டு பிளேற்றுகளெல்லாத்தையும் மாத்திப் போட்டார். நேற்றைக்கு அப்பிடி. இண்டைக்கு இப்பிடி. என்ன நடந்திருக்கும்? ஏதேன் செய்வினை சூனியமோ? தெரியாத விசியத்தைக் கதைக்கப்பிடாது. எண்டாலும் மனம் கேக்கிதில்லையே!

என்ன மனமாற்றமோ தெரியாது? திடீரெண்டு நேற்றைக்கு எல்லாப் பேப்பர்காரர் எல்லாரும் வாங்கோவெண்டு கூப்பிட்டுக் கதைச்சதெல்லாம் முந்தினதுக்கு எதிராத்தான் இருந்திது. சுமந்திரன்ரை, இந்த மனமாற்றம் என்ன மாற்றமோ? எண்டு பாடவேணும்போலை கிடக்கு.

அரசியல் கைதியளை ஏன் விடேல்லை எண்டு மைத்திரியோடை போன் எடுத்துச் சத்தம்போட்டவராம். மைத்திரி விடாததுக்குச் சொன்ன காரணங்கள் எல்லாத்தையும் கள்ளக் காரணங்கள் எண்டு சொல்லி மைத்திரியைத் திட்டுறாராம். ஆனந்த சுதாகரனை ஏன் இன்னும் விடேல்லை எண்டு பேப்பர்காரார் கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லேக்கைதான் உதைச் சொன்னவராம். மனுசன் அரசாங்கத்தைத் தும்பு பறக்கப் பேசுறாராம்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவைக் கொல்ல முயற்சி செய்தவை எண்டு ஒரு குடும்பத்தைக் கைது செய்து வைச்சிருந்திட்டு பொம்பிளையை மட்டும் விட்டிருக்கினம். ஆம்பிளையை விடேல்லை எல்லே? அதையும் கேட்டுச் சுமந்திரன் சண்டைப் பிடிச்சவராம்.

பிறகும் என்ன சொல்லுறார் எண்டால் அழுத்தம் குடுக்க வேணுமாம். இவ்வளவு காலமும் அழுத்தம், ஒத்தடம் எண்டு குடுத்துக் களைச்சுப் போனம். இனி அழுத்தத்தை றோட்டுப் போடுற றோலர் மெசினை வைச்சு உருட்டித்தான் அழுத்தம் குடுக்க வேணும். இல்லாட்டிப் பழைய லோன்றிலையுள்ள இரும்பு இஸ்திரிப் பெட்டியைக் கொண்டு வரவேணும்.

இடையிலை ஒரு கீலாவைப் பாருங்கோ. 2011 இலை இரண்டு அறிக்கை குடுத்தவையாம் புத்த விகாரையளை அமைக்கிறது சம்பந்தமாவும் குடுத்தவையாம். அதுக்குப் பிறகு தாங்கள் சொன்னமாதிரி புத்தவிகாரையை அகற்றினவையாம். ஆனால் புதுசாக் கட்டிறதை நிறுத்தேல்லையாம். ஒரிடத்திலை பழைய விகாரையை அகற்றிப் போட்டு இன்னுமொரு இடத்திலை இரண்டைக் கட்டினால் கணக்கிலை லாபம் ஆருக்கு. அப்புக்காத்து சட்டம் படிச்சிட்டுக் கணக்கைப் படிக்க மறந்து போச்சுது போலை கிடக்கு? பழையதை அகற்றிப் போட்டுப் புதுசாக் கட்டாட்டிப் பறவாயில்லை. பிறகும் புதுசாக் கட்டினால் பிறகேன் குடுத்த அறிக்கையைப் பற்றி இப்ப கதைப்பான்? "நடவடிக்கை எடுப்போம்" எண்டு ஆவேசப்படுறார். 2011 இலை குடுத்த அறிக்கையை 2018 ஆகியும் அமுல்படுத்திறதிலை இழுத்தடிப்பாக் கிடக்கு இனி என்ன "நடவடிக்கை எடுப்போம்" எண்டு மூலந்தள்ளக் கத்திறது?

பிறகு சொன்னவராம் மகாவலி அபிவிருத்திச் சபைக்குச் சொன்னம் வடக்குக்குத் தண்ணியை வேணும் எண்டால் தாருங்கோ. சிங்களச் சனத்தைக் கொண்டு வந்து குடியேத்திப் போடாதையுங்கோ எண்டு. அதுக்கு விடமாட்டம் எண்டு கத்திறார். இப்ப இரண்டு நாளைக்கு முன்னம் எங்கடை கூட்டமைப்புக்காரர் போய் எல்லைக் கிராமங்களைப் பாத்தவை. பாத்திட்டு வந்து இண்டைக்குக் கதைக்க இருந்தவை. பிறகு தவிக்க முடியாத காரணத்தாலை ஒத்தி வைச்சிருக்கு எண்டு சொன்னவர்.

அப்ப தமிழ் சனத்தின்ரை தலைமைப் பதவியிலை இருந்து கொண்டு அவையின்ரை பிரச்சினையைக் கதைக்கத் தவிர்க்க முடியாத வேறை ஒண்டுக்குப் போவேணும் எண்டால் தமிழ் சனத்தின்ரை பிரச்சினையை விட வேறை முக்கியமான ஒண்டு உவைக்கு இருக்கு எண்டதுதானே விளக்கம். அப்ப தமிழ் தலைமை தாங்கள்தான் எண்டு சொல்லுறவைக்குத் தமிழற்றை பிரச்சினை இரண்டாம் பட்சம் எண்டால் உவையளை ஏன் எங்களுக்கு எண்டு முதலி கேக்கிறான்.

கிழக்கிலை ஏற்பட்ட நிலைமைகளைப் போலை வடக்கிலை நடக்க விடமாட்டம் எண்டு பறோட்டா சூரி பல்லைக் கடிச்சுக் கொண்டு சொல்லுறமாதிரிச் சொல்லுறார் சுமந்திரன். ஏதோ எனக்கெண்டால் சமசியமாத்தான் கிடக்கு. ஏன் மச்சான் பிளேற்றை மாத்தினவர் எண்டு. எனக்கெண்டால் இதை நினைக்கப் பயமாத்தான் கிடக்கு. வடிவேலு சொல்லுறமாதிரி "இவங்களை நம்பவும் முடியேல்லை. நம்பாமல் இருக்கவும் முடியேல்லை. என்ரை ஐயோ அம்மாளாச்சி என்ன செய்வம்? கிணத்துக்கை குதிப்பம் எண்டால் கோடைக் கிணறு. வத்துத் தண்ணி. உடம்பு சிதறிப்போமெல்லே? மாரி எண்டால் தண்ணி கனக்க நிக்கும். உடம்புக்கு ஒண்டும் ஆகாதெல்லே?சாகவும் யோசிக்க வேண்டிக் கிடக்கு?

- வில்லங்கம் விநாசி

# கோப்பாய் பொலிஸ் பிரிவில் ஒரே நாளில் 37 பேருக்கு தண்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

கோப்பாய் பொலிஸ் பிரிவில் மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச் சாட்டில் 27 பேர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நேற்று தண்டிக்கப்பட்டனர்.

அத்துடன், சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தோர் 7 பேர், டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக குடியிருப்பு சூழலை வைத்திருந்த குற்றச் சாட்டில் 3 பேர் என 10 பேர் தண்டிக்கப் பட்டனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று ஒரே நாளில் 37 பேருக்கு எதிராக கோப்பாய் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தன.

மதுபோதையில் சாரத்தியம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் 27 பேர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அவர்களில் 3 பேர் அரச உத்தியோகத்தர்கள் என பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அவர்கள் மூவருக்கும் 7 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் ஆயிரத்து 500 ரூபா அரச செலவும் விதித்து மன்று உத்தரவிட்டது. அத்துடன் அவர்கள் மூவரின் சாரதி அனுமதிப் பத்திரங்களும் 9 மாதங்களுக்கு இடை நிறுத்தி வைக்க மன்று கட்டளையிட்டது.

மேலும் அதே குற்றச்சாட்டில் முற்படுத்தப்பட்ட 24 பேரும் 7 ஆயிரத்து 500 ஷரூபா தண்டம் செலுத்துவதுடன், 50 மணித்தியாலங்களுக்கு குறையாத சமூகப் பணியில் ஈடுபடவேண்டும் என்று மன்று உத்தரவிட்டது.

அத்துடன், அவர்கள் 24 பேரின் சாரதி அனுமதிப் பத்திரங்களை 9 மாதங்களுக்கு தடுத்துவைத்திருக்கவும் மன்று கட்டளை யிட்டது.

புதுவருட தினத்தன்று சட்டவிரோதமாக அரச சாராயத்தை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் முற்படுத்தப் பட்டார். அவரிடம் மீட்கப்பட்ட 175 மில்லி லீற்றர் கொள்ளவு கொண்ட 54 போத்தல்கள் சாரயத்தையும் பொலிஸார் சான்றுப் பொருளாக இணைத்தனர்.

அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் 10 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஏனைய 5 பேரிடமும் தண்டம் அறவீடு செய்து விடுவிக்க மன்று உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக குடியிருப்பை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 3 பேர் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களிடம் தலா ஆயிரத்து 500 தண்டம் அறவிட மன்று கட்டளை வழங்கியது.

நேற்றைய தினம் அறவிடப்பட்ட தண்டத்தின் ஒரு பகுதி பொலிஸ் திணைக் களத்துக்கு செல்வதுடன் பெரும் பகுதி வடக்கு மாகாண சபைக்கு செலுத்தப்படும் என்பது குறிப்பிட்டத்தக்கது.

(த)

## தொடர்ச்சிகள்

### அரசியல் கைதிகள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அரசியல்கைதி ஆனந்த சுதாகரனை வெசாக் தினத்திற்கு முன்னர் விடுவிக்க வேண்டுமென பல தரப்பினரும் அழுத்தங்கள் கொடுத்து வரும்நிலையில், புத்தாண்டுதினத்திற்குவிடுவிக்கப்படுவார் என ஜனாதிபதி தெரிவித்திருந்தும் விடுவிக்கப்படவில்லை.

ஆனந்த சுதாகரனை ஜனாதிபதியால் விடுவிக்க முடியாது, நீதிமன்றமே விடுவிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்ட நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பினால் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளதா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல்கைதி ஆனந்த சுதாகரனின் விடுதலை ஜனாதிபதி சம்பந்தப்பட்ட விடயம். ஆனந்த சுதாகரன் வழக்கின் தீர்ப்புக்குபின்னர் தண்டனை அனுபவிக்கும் கைதி. ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் மட்டுமே தான் விடுதலை செய்ய முடியும்.

கடந்த வாரம் ஜனாதிபதியுடன் நான் தொலைபேசியில் உரையாடிய போது, அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றம் இல்லை என்பதே தனது நிலைப்பாடும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் மட்டுமன்றி பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் உள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்த துள்ளார்.

அத்துடன், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உள்ள தடங்கல்களை விசாரித்த போது, அதில் உள்ள தடைகளைப் பற்றி தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் கூறப்பட்ட காரணங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவையாக இருந்தாலும் கூட, ஜனாதிபதியைக் கொண்டு இவற்றினைச் செய்து முடிக்க வேண்டும். அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் விதிவிலக்கு கிடையாது. ஆகையினால், இவர்களின் விடுதலை தொடர்பாகவும் ஜனாதிபதியுடன் பேசியுள்ளேன்.

அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் எப்போது தீருமென தெரியாது, இல்லாவிட்டால், வெசாக் தினத்துக்கு முன்னர் முடிகின்றதோ தெரியவில்லை. ஆனாலும், வெசாக் தினம் முடிந்த பின்னர் தம்முடன் பேசுவதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார் என்றும் எம். சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

### கைதிகளின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருட்தந்தை சத்திவேல், அனைத்து தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கம் கொழும்பில் நேற்றையதினம் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட சில தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நடைபெற்ற கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் தொடர்பான தீர்மானத்தின்படி மிகமோசமான சட்டமாக கருதப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்து சர்வதேச நியமங்களுக்கு அமைய புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதாக மைத்திரி - ரணில் தலைமையிலான அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

எனினும் இந்த வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு இரண்டரை வருடங்களாகியும் இதுவரை அதனை நிறைவேற்ற அரசாங்கம் தவறியுள்ளது.

இதுகுறித்து இந்த வருடம் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் கடும் அதிருப்தியை வெளியிட்டதுடன், இலங்கை அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்ற அமெரிக்கா, பிரித்தானியா உட்பட மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டு 2 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இன்னமும் இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யவோ அல்லது சர்வதேச தரத்துக்கு அமைவான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தவோ நடவடிக்கை எடுக்கவில்லை.

அதுமட்டுமன்றி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக சிறையில் வாடும் நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவும் மறுத்து வருகிறது.

இந்த நிலையிலேயே அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்துடன் தொழிற்சங்கங்களும், பொது அமைப்புக்களும் இணைந்து இன்று நிபந்தனையின்றி அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும், பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் எனவும் இம்முறை நடைபெறும் தொழிலாளர் தினமான மே தினத்தில் கோரிக்கைகளை அனைத்து தரப்பினரும் முன்வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஈ.பி.டி.பி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கலாம். இதனைவிட ஈ.பி.டி.பி பற்றிபேசி நேரத்தை வீணடிக்கநான் விரும்பவில்லை. எனதமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினரும்அக்கட்சியின் பேச்சாளருமானஎம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சமகாலஅரசியல் நிலமைகள் குறித்துநாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் யாழ்.அலுவலகத்தில் நேற்று மாலை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஈ.பி.டி.பியுடன் பேச்சு நடத்தியதற்கான ஆதாரங்கள் இருப்பதாகஈ.பி.டி.பி அண்மையில் வெளியிட்டிருந்த கருத்து தொரடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குபதிலளிககும்போதேசுமந்திரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

### ஆசிரியை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார். இரண்டு நாட்கள் வகுப்புக்கு வராத காரணத்தால் சிறுவனை ஆசிரியை தாக்கினார் என்று கூறப்படுகிறது. சிறுவனின் மூக்கிலும், காதிலும் இரத்த கசிவு ஏற்பட்டுள்ளது. இது குறித்து சிறுவனின் பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

### தமிழர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதென லங்கா நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் நினைவு தினம் நேற்று காலை யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் நடைபெற்றது.இந்த நிகழ்வில் நினைவு பேருரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்டாரநாயக்க செல்வநாயகம் ஆகியோர் ஒன்றாக படித்தவர்கள். பண்டாரநாயக்க 1962 இல் சமஷ்டி என்றார். பின்னர் சிங்கள அமைப்புக்கு தலைமை தாங்கிய பின்னர் அதனை மறந்து விட்டார். இது போன்று தான் இலங்கை அரசியலில் பௌத்தம் தாக்கம் செலுத்தி வருகின்றது.

தந்தை செல்வாவின் காலத்தில் தீர்வுக்கான வழிகள் சில காணப்பட்டன அதில் பண்டா -செல்வா, டட்லி- செல்வா ஒப்பந்தங்களை குறிப்பிடலாம் இதனை குழப்பியது இடது சாரிகளே. இவ்வாறு இடது சாரிகளும் வரலாற்றில் தவறிழைத்து விட்டார்கள்.

மகாத்மா காந்தி தனது மக்களுக்காக எவ்வாறு அமைதியான முறையில் போராடினாரோ, அதே போன்று தான் தன்னுடைய மக்களுக்காகவும் தந்தை செல்வா போராடினார். பல்லாயிரக்கணக்கான மக்கள் அவருக்கு பின்னால் நின்று போராடினார்கள்.

இன்றும் தமிழ் மக்களின் பிரச்சினை முடியவில்லை தமிழ் அரசு இன்னும் உருவாகவில்லை, தமிழர் தாயகத்தை விட்டுவிட முடியாது. இந்த அரசுக்கு நாம் அனைவரும் அழுத்தம் வழங்க வேண்டும். எதிர்காலத்தில் எமது பயணம் ஒன்றிணைந்து தொடர வேண்டும். தமிழ் மக்கள் அரசியல் அபிலாசைகளை பெறும் வரையில் பயணிப் போம் என்றார்.

### அரசியல் கைதிகளும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்திய வடபகுதி மக்களுக்கு சொந்தமான காணிகளில் 80 வீதமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

தமிழ், சிங்கள புத்தாண்டு பரிசாக 560 ஏக்கர் மீண்டும் மக்களிடம் கையளிக்கப்பட்டது. இது குறித்து எவரும் பேசுவதில்லை. அப்படி இருக்கும் நிலையில் இன்னும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் நபர்கள் அதனை வியாபாரமாக மாற்றிக்கொண்டுள்ளனர்.

காணி, காணாமல் போனவர்கள் மட்டுமல்லாது அரசியல் கைதிகள் தொடர்பில் வ்டக்கில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் அரசசார்பற்ற அமைப்புகளின் ஆர்ப் பாட்டங்கள். இவை சாதாரண மக்களை தவறாக வழி நடத்தும் வேலை.

நாட்டைப் பிரிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு நான் எந்த வகையிலும் உறுதுணை வழங்க மாட்டேன். அப்படியான நபர்களுடன் எவ்விதமான பேச்சுவார்த்தைகளையும் நடத்தப் போவதில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

### கொக்குவிலில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்வெட்டில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

### ரவியின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநடப்பு செய்துள்ளதுடன் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பதவியையும் இராஜினாமா செய் துள்ளார்.

தான் ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாகவும், அவரின் நியமனத்துக்கு எதிராக போராடுவதாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறியுள்ளார்.

### மல்லாவியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெல் மூடைகளும் மழையினால் நனைந்துள்ளன. மற்றும் நகரத்தில் உள்ள 5 கடைகளின் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன இதேவேளை வாழை மரங்கள் மற்றும் மரவள்ளி என்பன காற்றினால் அடித்து சாய்க்கப் பட்டுள்ளது.

இந்த சேதங்கள் குறித்து கிராம அலுவலகரிடம் முறையிட்டுள்ளதுடன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கும் மக்கள் தெரியப்படுத்தியுள்ளார்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையஅதிகாரிகள் இன்று நேரில் சென்று சேத விபரங்களைபார்வையிடவுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

# ஐ.எஸ். கோட்டை தகர்ப்பு: 30 தீவிரவாதிகள் மடிந்தனர்!

கெய்ரோ, ஏப். 27

மத்திய மற்றும் தெற்கு சினாய் தீபகற்பத்தில் எகிப்து இராணுவம் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில், அந்தப் பகுதியில் பதுங்கியிருந்த சுமார் 30 ஐ.எஸ். பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

173 பயங்கரவாதிகள் காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டனர். பயங்கரவாதிகளின் பதுங்குமிடங்களை இராணுவத்தினர் இடித்து தரைமட்டமாக்கினர். அங்கிருந்து ஏராளமான ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் மற்றும் பயங்கரவாதிகள் பயன்படுத்தி வந்த பல்வேறு வாகனங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கடந்த 2011 ஆம் ஆண்டு எகிப்தில் ஏற்பட்ட உள் நாட்டுப் புரட்சிக்குப் பிறகு, சினாய் தீபகற்பத்தில் ஐ.எஸ். உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாதிகளின் ஆதிக்கம் தலை தூக்கியது. 2013 ஆம் ஆண்டு இஸ்லாமிய ஆதரவு ஜனாதிபதியான முகமது மோர்ஷி பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து, பயங்கரவாதிகள் எகிப்தின் முக்கிய இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர். இதுவரை, பயங்கரவாதிகளின் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்களும், பொலிஸாரும் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில், பயங்கரவாதிகள் பதுங்கியுள்ள சினாய் தீபகற்பத்தில் அதிரடித் தாக்குதல் நடத்தி அவர்களை வேட்டையாட எகிப்து இராணுவம் திட்டமிட்டது. அதன்படி, இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து பயங்கரவாதிகளின் பதுங்குமிடங்களில் புகுந்து நேற்றுமுன் தினம் அதிரடித் தாக்குதல் நடத்தினர்.

இதன் மூலம் தெற்கு மற்றும் மத்திய சினாய் தீபகற்பப் பகுதியில் பயங்கரவாதிகளின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டப்பட்டுவிட்டதாக எகிப்து இராணுவம் தெரிவித்துள்ளது. (ஆ)



## எனது மகனுக்கு முன் நிர்வாணமாகவே இருப்பேன்

### அமெ. நடிகை ஆம்பர் பரபரப்பு

வொஷிங்டன், ஏப்.27

தனது மகன் முன் நிர்வாணமாக தான் இருப்பேன் என அமெரிக்க நடிகை ஆம்பர் ரோஸ் கூறியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

என் மகன் பெண்களை மதிப்பவனாக வளர வேண்டும் என்பதற்காக அவர் முன் நான் நிர்வாணமாக இருப்பேன் என நடிகை ஆம்பர் ரோஸ் கூறியுள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த அவர் , தனது 5 வயது மகன் செபாஸ்டியன் முன்பு நிர்வாணமாகத்தான் இருப்பேன் என பகிரங்கமாக உலகுக்குக் கூறியுள்ளார்.

“எந்த ஒரு பொருள் மறைக்கப் படுகிறதோ அதனைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் அனைவருக்கும் ஏற்படுகிறது. அந்த மாதிரியான ஆர்வம் என் மகனுக்கு வந்துவிடக் கூடாது என்பதால்தான் என் மகன் முன் நிர்வாணமாக இருக்கிறேன்.

அத்துடன், எனது வீட்டில் பெண் உறுப்புடன் தொடர்புடைய ஓவியங்களையும் வாங்கிவைத்துள்ளேன். இதன் மூலம் எனது மகனுக்கு பெண்களின் உடல் உறுப்புகளைப் பற்றி அனைத்தும் தெரியும். இதன் மூலம் அவன் எதிர்காலத்தில் பெண்களைப் பார்த்தால் சாதாரணமாக நடந்துகொள்வான்.

அதுமட்டுமின்றி அவன் பெண்களை மதிப்பான் .” எனவும் அவர் கூறியுள்ளார். (ஆ)





## உ.பியில் கோர விபத்து: 13 மாணவர்கள் சாவு!

லக்னோ, ஏப்.27

உத்திரபிரதேசம் குஷிநகர் பகுதியில் , பாடசாலை பஸ் மீது ரயில் மோதி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த 11 மாணவர்கள் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பல மாணவர்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

ஆளில்லா ரயில்வே தடத்தை, குறித்த பஸ் கடக்கும் போதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.


படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்துக்கு தலா 2 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்குமாறு மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார். (ஆ)

## கறுப்புக் கிரகம் கண்டுபிடிப்பு

நிலக்கரியை விட கறுப்பாக இருக்கும் கிரகம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பிரிட்டனில் உள்ள கீல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கிரகத்தைக் கண்டறிந்துள்ளனர். நாஸாவின் கெப்ளர் தொலைநோக்கி மூலம் இந்தக் கிரகம் கண்டறியப்பட்டுள்ளது. இது பூமியிலிருந்து 470 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது . இதற்கு வாஸ்ப்-104 பி’ என்று பெயர் வைத்துள்ளனர்.



“இதுவரை கண்டறியப்பட்ட கிரகங்களிலேயே இதுதான் மிகவும் இருண்ட கிரகமாக இருக்கிறது. தனது நட்சத்திரங்களிடம் இருந்து பெறப்படும் ஒளியில் 99 சதவீதத்தை உள்வாங்கிக் கொள்கிறது. குறைந்த அளவு ஒளியை மட்டுமே இது உமிழ்கிறது. ஒவ்வொரு கிரகமும் தங்களுக்கு அருகிலுள்ள நட்சத்திரங்களில் இருந்து ஒளியைப் பெற்று உமிழ்வது இயல்பு. ஆனால், இந்தக் கிரகம் ஒளியை உட்கிரகித்துக் கொண்டு சிறிய அளவிலேயே வெளியே உமிழ்கிறது. வெள்ளிக் கிரகம் 70 சதவீத ஒளியை உமிழ்கிறது. வேறு சில கிரகங்கள் 10 சதவீத அளவிலேயே ஒளியை உமிழ்கின்றன. வாஸ்ப்-104 பி கிரகம் தனது வட்டப் பாதையைச் சுற்றி வர 1.76 நாட்களை எடுத்துக்கொள்கிறது. இதுதொடர்பாக தொடர்ந்து ஆய்வு நடத்தி வருகிறோம்.” என்று கீல் பல்கலைக்கழக விஞ்ஞானி டியோ மோக்னிக் தெரிவித்தார். (ஆ)

## பிரபல பாடகி எம்.எஸ்.ராஜேஸ்வரி காலமானார்

சென்னை , ஏப். 27



பிரபல பின்னணிப் பாடகி எம்எஸ் ராஜேஸ்வரி தனது 87 ஆவது வயதில், உடல் நலக்குறைவால் சென்னையில் நேற்றுக் காலமானார்.

1931 ஆம் ஆண்டு பிறந்த எம்.எஸ்.ராஜேஸ்வரி தமிழ், தெலுங்கு, மலையாளம் என 500 இற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

சிறுவயதில் இருந்தே பாடுவதில் ஆர்வமாயிருந்த எம்.எஸ்.ராஜேஸ்வரி, ‘நாம் இருவர்’ திரைப்படத்தில் பாடிய 'காந்தி மகான்' என்ற பாடல் மூலம் பாடகியாக அறிமுகமானார். அந்தப் பாடலுக்காகவே திரைப்படம் வெற்றிகரமாக ஓடியது. பின்னர், ஏ.வி.எம். நிறுவனத்தில் மாதச் சம்பளத்தில் இணைந்தார். ஹிந்தியில் வெற்றிகரமாக ஓடிய 'ராமராஜ்யா' திரைப்படத்தைத் தமிழில் மொழிமாற்றம் செய்து ஏ.வி.எம். நிறுவனம் வெளியிட்டது. இதில், எம்.எஸ். ராஜேஸ்வரி நான்கு பாடல்களைப் பாடினார்.

பின்னர் ‘ சிட்டுக்குருவி சேதி தெரியுமா’ (டவுன் பஸ்), 'அம்மாவும் நீயே அப்பாவும் நீயே’ (களத்தூர் கண்ணம்மா),’ மியாவ், மியாவ் பூனைக்குட்டி ‘ (குமுதம்), 'பேசியது நானில்லை கண்கள்தானே, ‘நினைப்பது நானில்லை நெஞ்சம்தானே’ (செங்கமலத் தீவு), 'பூப் பூவா பறந்து போகும் பட்டுப்பூச்சி அக்கா’ (திக்குத் தெரியாத காட்டில்) ஆகிய பாடல்கள் இவரால் பிரபலமானது.

இவரது மறைவுக்குத் திரையுலகத்தைச் சேர்ந்த பலரும் இரங்கலைத் தெரிவித்துள்ளனர். (ஆ)

## ஆப்கானிஸ்தானில் இரட்டைக் குண்டு வெடிப்பு


காபூல், ஏப்.27

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நடைபெற்ற இரட்டைக் குண்டு வெடிப்புத் தாக்குதலில், 3 பொதுமக்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைநகர் காபூலில் பொலிஸ் சோதனைச் சாவடி செயற்பட்டு வருகிறது. இந்த சோதனைச் சாவடிக்கு அருகில் இரண்டு இடங்களில் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் திடீரென குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர்.

காயமடைந்தவர்கள் தற்போது சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொதுமக்களைக் குறிவைத்தே இந்த வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஆ)

# வடக்கு, கிழக்கு மாணவர்கள் நேற்றும் பதக்க வேட்டை



கொழும்பு,ஏப்.27

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்ற 56 ஆவது கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டித் தொடரின் 3 ஆவது நாளான நேற்றையதினம், தமது திறமைகளை வெளிப்படுத்திய வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வீரர்கள் 2 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்று அசத்தியிருந்தனர்.

இதில் 16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் யாழ். பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவன் சுசிந்திரகுமார் மிதுன்ராஜ், 54.33 மீற்றர் தூரத்தை எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

பெண்களுக்கான 20 வயதுக்கு உட்பட்ட ஈட்டி எறிதலில் கலந்து கொண்ட மூதூர் பட்டித்திடல் மஹா வித்தியாலத்தைச் சேர்ந்த நாகேந்திரம் உதயவாணி மற்றும் யாழ். சாவகச்சேரி இந்து கல்லூரியைச் சேர்ந்த சந்திரசேகரன் சங்கவி ஆகிய வீராங்கனைகள் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்று அசத்தியிருந்தனர்.



# தந்தைக்கான கடமையில்

பெங்களூர்,ஏப்ரல்.27

பெங்களூர் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் வெற்றி பெற்றது. கடினமான இலக்கை விரட்டிப்பிடித்த சென்னை அணித் தலைவர் தோனி 34 பந்துகளில் 70 ஓட்டங்கள் குவித்தார். இந்நிலையில், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தோனி தனது மகளுக்கு தலை உலர வைக்கும் வீடியோ ஒன்றை பதிவிட்டுள்ளார்.

"கேம் ஓவர். ஒரு சிறப்பான தூக்கம். தற்போது தந்தைக்கான டூட்டிக்கு திரும்பிவிட்டேன்" என பதிவிட்டுள்ள இந்த வீடியோ இணையதளத்தில் வைரலாக பரவி வருகிறது. வீடியோ பதிவேற்றப்பட்ட கொஞ்ச நேரத்தில் 3.9 லட்சம் பேர் அதனை பார்த்துள்ளனர். 2.2 லட்சம் பேர் வீடியோவுக்கு லைக் செய்துள்ளனர்

# பலமான பந்துவீச்சால் பணிந்தது பஞ்சாப்



ஹைதராபாத், ஏப்.27

கடந்த போட்டியில் பஞ்சாப்பிடம் வாங்கிய அடியை இம்முறை தன்னுடைய பந்துவீச்சுப் பலத்தின் மூலம் திருப்பிக் கொடுத்தது சன் ரைசர்ஸ் அணி.

நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி கப்டன் அஷ்வின் பந்து வீச்சைத் தேர்வு செய்தார். இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணிக்கு ஷிகர் தவான், கேன் வில்லியம்சன் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். அன்கித் ராஜ்பூட் வீசிய முதல் ஓவரின் நான்காவது பந்தில் டக் அவுட் ஆனார் வில்லிம்சன்.

அதன்பின் வந்த விரித்திமான் சஹா 6 ஓட்டங்களிலும், தவான் 11ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். முதல் மூன்று விக்கெட்களையும் அன்கித் ராஜ்பூட் வீழ்த்தினார். அப்போது ஹைதராபாத் அணி 27 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்களை இழந்து தடுமாறியது.

மணிஷ் பாண்டே, ஷகிப் அல் ஹசன் இருவரும் சேர்ந்து அணியைச் சரிவில் இருந்து மீட்கப் போராடினர். ஷகிப் அல் ஹசன் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின் யூசுப் பதான் களமிறங்கினார். நிதானமாக விளையாடிய மணிஷ் பாண்டே அரைச்சதம் கடந்தார். அவர் 54 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் அன்கித் ராஜ்பூட் பந்தில் ஆட்டமிழந்தார்.

ஹைதராபாத் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்தது. யூசுப் பதான் 21ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். பஞ்சாப் அணி பந்துவீச்சில் அன்கித் ராஜ்பூட் 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு ராகுலும் , கெய்லும் பலமான அடித்தளம் போட்டனர். இருவரும் இணைப்பாட்டமாக 50 ஓட்டங்களை 6 ஓவர்களில் கடந்தனர். ஆனால் அந்த அடித்தளத்தைப் பயன்படுத்தி வெற்றிக்காகப் போராடாமல் தோற்பதற்காக விளையாடியது போல, அவசர அவசரமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து, 119 ஓட்டங்களை மட்டுமே பஞ்சாப் அணி எடுத்து 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பஞ்சாப் அணி சார்பில், ராகுல் 32, கெய்ல் 23, மயங்க் அகர்வால் 12, கருண் நாயர் 13, பிஞ்ச் 8, திவாரி 1, அஷ்வின் 4, ரை 4, சரன் 2, ராஜ்புட் 8, முஜீப் 10(ஆட்டமிழக்காமல்) ஓட்டங்களை எடுத்தனர். ஹைதராபாத் அணி சார்பில் ரஷீட் கான் 3, ஷகிப் அல் ஹசன் 2, பசில் தம்பி 2, சந்தீப் சர்மா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். (அ)

# சிக்ஸர்களில் சாதனை



பெங்களூர்,ஏப்ரல்.27

ஐபிஎல் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சென்னை, பெங்களூர் இடையேயான போட்டியில் இரு அணிகளும் இணைந்து 33 சிக்ஸர்கள் அடித்து சாதனை படைத்துள்ளன.

11-வது ஐ.பி.எல். போட்டி யில் பெங்களூர் அணியை வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் 5ஆவது வெற்றியை பெற்றது.

இந்த போட்டியில் பெங்களூர் அணி வீரர்கள் 16 சிக்ஸர்களும், சென்னை அணி வீரர்கள் 17 சிக்ஸர்களும் அடித்தனர். மொத்தமாக இரு அணி வீரர்களும் இணைந்து இந்தப் போட்டியில் 33 சிக்ஸர்களும், 18 பவுண்டரிகளும் அடித்தனர்.

இதன்மூலம் அதிக சிக்ஸர் அடிக்கப்பட்ட ஐபிஎல் போட்டியாக நேற்றுமுன்தினம் நடந்த போட்டி முதலிடம் பிடித்துள்ளது. கடந்தாண்டு டெல்லி - குஜராத் இடையேயான ஆட்டத்தில் 31 சிக்ஸர்கள் அடிக்கப்பட்டதே முந்தைய சாதனையாக இருந்தது. இந்தாண்டு சென்னையின் நடைபெற்ற சென்னை - கொல்கத்தா இடையிலான ஆட்டத்திலும் 31 சிக்ஸர்கள் அடிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் ரி -20 அந்தஸ்து வழங்கிய ஐ.சி.சி

டுபாய், ஏப்.27

அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் சர்வதேச ரி20 அந்தஸ்து வழங்கியது ஐசிசி சர்வதேச கிரிக்கெட் சபை அங்கம் வகிக்கும் 104 உறுப்பு நாடுகளுக்கும் தற்போது சர்வதேச ரி20 அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இந்த தகவலை கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஐசிசியின் தலைமை செயல் அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் தெரிவித்தார்.

இதையடுத்து ஆபிரிக்கா (22), அமெரிக்கா (17), ஆசியா (21), கிழக்கு ஆசிய- பசுபிக் (11), ஐரோப்பா (34) ஆகிய 104 உறுப்பு நாடுகளும் சர்வதேச ரி20 அந்தஸ்து பெற்றுள்ளன. இதுவரை 18 நாடுகளுக்கு மட்டுமே சர்வதேச ரி20 அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 27.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.